Sri MANAKULA VINAYAGAR
Medical college and Hospital
*Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry- 605107*

MANA - KURAL
*The official podcast of SMVMCH*

**Name of Resource person:**
**Dr. A. Arul Kumaran**
**Department: Paediatrics**

**Podcast Title: Congential Hypothroidism Screening**

**Category: (Select relevant category)**
**Public awareness**

**TRANSCRIPT**

வணக்கம்,

வணக்கம் ....நான், ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி குழந்தை நல பேராசிரியர், டாக்டர் அருள் குமரன் பேசுகிறேன்.

கஞ்சனிடல் ஹைப்போ தைராய்டுசம் அதாவது பிறவி தைராய்டு குறைபாடு பரிசோதனை பற்றி முக்கியமான தகவல்களை ஒரு சிறிய உரையாடல் மூலமாக நாம் இப்பொழுது பார்க்கலாம்.

பிறவி தைராய்டு குறைபாடு என்றால் என்ன டாக்டர்?
புதிதாகப் பிறந்த பச்சிளம் குழந்தைக்கு தைராய்டு ஹார்மோன் குறைவாக இருந்தால் அதுவே பிறவி தைராய்டு குறைபாடு நோய் என்று கூறப்படுகிறது.

இது ஏன் வருகிறது டாக்டர்?
பிறந்த குழந்தைக்கு தைராய்டு சுரப்பி இல்லாமல் இருக்கலாம் ,சரியாக உருவாகாமல் இருக்கலாம், இடம் மாறி இருக்கலாம் ,அல்லது இருந்தும் சரியாக வேலை செய்யாமல் இருக்கலாம். இதில் எது நடந்தாலும் இந்த தைராய்டு குறைபாடு வரும்.

இந்த நோய் குழந்தைகளுக்கு என்ன செய்யும்?
பிறந்த குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு தைராய்டு ஹார்மோன் மிகவும் அவசியம் .குழந்தை பிறந்த முதல் மூன்று வருடங்களில் மூளை வளர்ச்சி என்பது(80%) சதவீதத்தை அடைகிறது .அதனால் இந்த குறைபாடு இருந்து அதனை ஓரிரு வாரங்களில் கண்டறிந்து சிகிச்சை தொடங்காவிட்டால் வாழ்நாள் முழுவதும் மூளை வளர்ச்சி உறைப்பாட்டோடு வாழ நேரிடும்.

இந்த நோயை எப்படி கண்டுபிடிப்பது டாக்டர்?
குழந்தை பிறந்து ஓரிரு நாட்களில் முக்கியமாக மூன்று முதல் நான்கு நாட்களுக்குள் செய்யப்படும் “தைராய்டு பங்ஷன் டெஸ்ட்” என்னும் எளிய ரத்த பரிசோதனை மூலம் தைராய்டு குறைபாட்டினை கண்டறியலாம்.

இந்த நோய் இருந்தால் என்ன வைத்தியம் உண்டு டாக்டர்?
தைராய்டு ஹார்மோன் மாத்திரை வடிவில் கிடைக்கிறது. மருத்துவரின் பரிந்துரைப்படி உரிய அளவை தினமும் தாய்ப்பாலில் கலந்து எளிதில் குழந்தைக்கு கொடுக்கலாம் .உரிய நேரத்தில் சிகிச்சை தொடங்காவிட்டால் முழு மூளை வளர்ச்சி பாதிக்கப்பட நேரிடும்.

இதனால் பெற்றோர்கள் என்ன செய்ய வேண்டும் டாக்டர்?
பிறந்த குழந்தைகளுக்கு செய்யப்படும் இந்த எளிய தைராய்டு பரிசோதனை பற்றி உங்கள்

மருத்துவரிடம் அவசியம் கேளுங்கள். ஆரம்பத்தில் பெரிய அறிகுறி ஏதும் இல்லாத இந்த குறைபாட்டை குழந்தையை பார்த்து கண்டறிய. எனவே உரிய நேரத்தில் பரிசோதனை செய்து உங்கள் குழந்தையின் வாழ்வை காத்திடுங்கள்.

எனவே பிறக்கும் எல்லா குழந்தைகளுக்கும் ஒரு வாரத்துக்குள் தைராய்டு பங்க்ஷன் டெஸ்ட் செய்வது மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்துகிறேன்

.

நன்றி வணக்கம்!!

**Signature of the Resource Person**

Dr.A.ARUL KUMARAN,M.D.,
Reg No.66924
PROFESSOR
DEPARTMENT OF PAEDIATRICS
Sri Manakula Vinayagar Medical College and Hospital
Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry-605 107.

**Signature of the HOD**

Dr. T. BHARATH KUMAR
Regd. No: 75119
PROFESSOR & HEAD
Department of Pediatrics
Sri Manakula Vinayagar Medical College & Hospital
Kalitheerthalkuppam, Madagadipet,
Puducherry-605107.